# *நாலடியார் மற்றும் திருக்குறள் ஒப்பீடு*

## *முன்னுரை*

இந்த ஆய்வு அறிக்கையில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களான திருக்குறள் நாலடியார் ஆகிய நூல்கள் ஒப்பீடு செய்யப்பட்டு, அவற்றில் சொல்லப்பட்ட கருத்துக்கள் மூலம் அதன் ஒற்றுமை மற்றும் வேற்றுமை கூறப்பட்டுள்ளது.திருக்குறளில் இரவச்சம் என்னும் அதிகாரமும் நாலடியாரில் பொருட்பால் பிரிவில் உள்ள இரவச்சம் பாடல்களும் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளுன.

## *ஒற்றுமை*

- பொருளை மறைப்பாரிடம் பிச்சை எடுக்க வேண்டாம் என்று திருக்குறள் கூறுகிறது, அதே போல் மறைப்பாரிடம் பிச்சை எடுத்து தலை குனிந்து நிற்க மாட்டார்கள் என்று நாலடியார் கூறுகிறது.

இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று. **குறள் 1067**

பிச்சை எடுத்துத்தான் ஆகவேண்டும் என்றால், தம்மிடம் இருப்பதை மறைப்பாரிடம் பிச்சை எடுக்க வேண்டா என்று, பிச்சை எடுப்பவரிடம் எல்லாம் நாம் பிச்சை கேட்கின்றேன் என்பதே இக்குறளின் பொருள் ஆகும்.இதே போன்ற கருத்து நாலடியாரிலும் கூறப்பட்டிருக்கிறது.

திருத்தன்னை நீப்பினும் தெய்வம் செறினும்
உருத்த மனத்தோ டுயர்வுள்ளி னல்லால்
அருத்தம் செறிக்கும் அறிவிலார் பின்சென்
றெருத்திறைஞ்சி நில்லாதா மேல். **304**

செல்வம் தம்மை விட்டு விலகினாலும், தெய்வம் சினந்து வருந்தினாலும், மேலோர் ஊக்கம் குன்றாமல் உயர் நெறி (தொழில் செய்து வாழும்

வாழ்க்கை) கருதுவார்களே அல்லாமல், பொருளைப் புதைத்து வைத்து பாதுகாப்பவராகிய அற்பர் முன்னே சென்று, 'என்னிடம் ஒன்றும் இல்லை; ஏதேனும் தாருங்கள்' என்று கூறி நாணித் தலை குனிந்து நிற்க மாட்டார்கள்.

- உள்ளதை மறைக்காமல் கொடுக்கும் கண்போல் சிறந்தவரிடம் பிச்சை எடுக்காமல் இருப்பது கோடி நன்மை ,அதுவே உயர்ந்த வாழ்க்கை என திருக்குறளும் நாலடியாரும் கூறுகிறது.

கரவாது உவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்

இரவாமை கோடி உறும். **குறள் 1061**

ஒளிவு மறைவு இல்லாமல், மனம் மகிழ்ந்து பிறருக்குக் கொடுக்கும் இயல்பு உள்ளவர் இடத்தில் ஒன்றைக் கேட்கா திருப்பது கோடி நன்மையாகும்.இதே போன்ற கருத்து நாலடியாரிலும் கூறப்பட்டிருக்கிறது.

கரவாத திண்ணன்பின் கண்ணன்னார் கண்ணும்
இரவாது வாழ்வதாம் வாழ்க்கை - இரவினை
உள்ளுங்கால் உள்ளம் உருகுமால், என்கொலோ
கொள்ளுங்கால் கொள்வார் குறிப்பு. **305**

தம்முடைய பொருளை ஒளிக்காது கொடுக்கும் திடமான அன்புடைய, கண் போன்ற இனியவரிடத்தும் இரவாமல் வாழ்வதே உயர்ந்த வாழ்க்கை ஆகும். ஏனெனில் 'சென்று யாசிப்போம்' என இரத்தலை நினைக்கும்போதே, நெஞ்சு வெந்து உருகுகிறது. அவ்வாறிருக்க, ஒருவரிடம் பொருளை யாசித்துப் பெறும் போது, அப்பொருளைப் பெறுவோர் மனம் எப்படியிருக்குமோ? (என்ன பாடுபடுமோ?)

- பிச்சை எடுப்போனிடம் 'இல்லை' என்று மறுத்தால் அப்போதே அவன் உயிர் போய் விடும் என திருக்குறளும் நாலடியாரும் கூறுகிறது.

கரப்பவர்க்கு யாங்கொளிக்கும் கொல்லோ இரப்பவர்

சொல்லாடப் போஒம் உயிர். **குறள் 1070**

இல்லை என்று சொல்வதைக் கேட்ட உடனே பிச்சை எடுப்பவரிடமிருந்து போய் விடும் உயிர், இல்லை என்று சொல்பவர்க்கு மட்டும் போகாமல் எங்கே போய் ஒளிந்து கொள்கிறது?.இதே போன்ற கருத்து நாலடியாரிலும் கூறப்பட்டிருக்கிறது.

புறத்துத்தன் இன்மை நலிய அகத்துத்தன்
நன்ஞானம் நீக்கி நிறீஇ ஒருவனை
ஈயாய் எனக்கென் றிரப்பானேல் அந்நிலையே
மாயானோ மாற்றி விடின். **308**

தனது வறுமையானது புறமாகிய தன் உடலை வருத்த, அதற்காகத் தன் அகத்தே ஒளி விடும் மெய்யறிவை விலக்கி, அறியாமையை நிறுத்தி, செல்வன் ஒருவனிடம் சென்று, 'ஒன்றைத் தர வேண்டும்' என இரப்பானாகில், அச்செல்வன் 'இல்லை' என்று மறுக்க, அதைக் கேட்டபோதே அவ்வறுமையாளன் உயிர் விடமாட்டானோ? உயிர்விடுவான். (மானத்தால் உயிர் துறப்பான் என இரங்கிக் கூறியது).

- பிச்சை எடுத்து வாழ்வது கொடுமை,துன்பம் தருவது என திருக்குறளும் நாலடியாரும் கூறுகிறது.

இன்மை இடும்பை இரந்துதீர் வாமென்னும்

வன்மையின் வன்பாட்ட தில். **குறள் 1063**

இல்லாமையால் வரும் துன்பத்தை (உழைத்துப் போக்காது) பிச்சை எடுத்துப் போக்கிக் கொள்ளலாம் என்று எண்ணும் கொடுமையிலும் கொடுமை வேறு இல்லை.இதே போன்ற கருத்து நாலடியாரிலும் கூறப்பட்டிருக்கிறது.

ஒருவ ரொருவரைச் சார்ந்தொழுகல் ஆற்றி

வழிபடுதல் வல்லுத லல்லால் - பாசழிந்து

செய்யீரோ என்னானும் என்னுஞ்சொற் கின்னாதே

பையத்தான் செல்லும் நெறி? **309**

வறியவர் ஒருவர் செல்வர் ஒருவரைச் சார்ந்து, அவர் சொன்னபடி செய்து வணங்கித் தாழ்ந்து வாழ்தல் உலக முறைமை ஆகும். அப்படியின்றி மானம் கெட்டு 'எனக்கு ஏதேனும் தர மாட்டீர்களா?' என்று இருப்பதை விட, மெல்லப் பிறரைச் சார்ந்து அவர் ஏவல் கேட்டு வாழும் முற்கூறிய வாழ்க்கை அவ்வளவு துன்பம் தருவதோ? (ஒரு தொழில் இன்றிப் பிறரைத் தொழுது உண்டு வாழ்தல் துன்பம் தருவது தான். ஆயினும் அதை விடத் துன்பம் தருவது இரந்து உண்டு வாழ்தல் என்பது கருத்து).

***வேற்றுமை***

ஏதும் இல்லாமல் வறுமை உற்ற போதும் பிறரிடம் சென்று பிச்சை கேட்கச் சம்மதிக்காத மன அடக்கம், எல்லா உலகும் சேர்ந்தாலும் ஈடாகாத பெருமையை உடையது.பசுவிற்குத் தண்ணீர் வேண்டும் என்று பிறரிடம் பிச்சையாக கேட்டாலும் அதுவும் பிச்சையாதலால், நம் நாவிற்கு அதைவிடக் கேவலம் வேறு இல்லை.பிச்சை எடுக்காமல் இருப்பதே பெருமை, பிச்சை எடுத்தல் வன்மையானது என்று கூறுகிறது திருக்குறள்.

ஆனால் நாலடியார் இரத்தல் இழிதொழிலே ஆனாலும் அந்த இரத்தலை மேற்கொள்ளாதவனாய்ப் பசியோடு இருந்து இறப்பது குற்றமா? ஆகாது. ஏன் எனில் ஒருவன் இறந்த பின் பிறக்கின்ற பிறப்பு, கண் இமைக்கும் நேரத்தில் நிகழ்வதல்லவா? என்று கூறுகிறது நாலடியார்

ஒருவரிடம் பொருளை யாசித்துப் பெறும் போது, அப்பொருளைப் பெறுவோர் மனம் எப்படியிருக்குமோ? என்று இரப்போரின் மனதை பற்றி பேசுகிறது நாலடியார்.

இல்லை என்று சொல்வதைக் கேட்ட உடனே பிச்சை எடுப்பவர் இடமிருந்து போய் விடும் உயிர், இல்லை என்று சொல்பவர்க்கு மட்டும் போகாமல் எங்கே போய் ஒளிந்து கொள்கிறது? . இரப்போரிடம் இல்லை என்று சொல்போருக்கு மனமில்லை என்று சொல்கிறது திருக்குறள்.